வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 27.09.2024

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி–வேலூர் மாவட்டம்–கல்வி உதவித்தொகை– 2023–2024 ஆம் கல்வியாண்டு 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர்,மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவியர்கள்–நீண்ட நாட்களாக பள்ளிக்கு வருகை புரியாமல் இருத்தல்,இடைநிறுத்தம்,வேறு காரணங்களால் வருகை புரியாமல் இருத்தல்– அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்தல்–சார்பு. |
| பார்வை: | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரின் கடித ந.க.எண்:என்4/16469/2024 நாள்:18.09.2024 |

---------

வேலூர் மாவட்டம், 2023–2024 ஆம் கல்வியாண்டில் 9 மற்றும் 10ஆம் வகுப்பு, அரசு பள்ளிகளில் பயின்ற கல்வி உதவித் தொகையாக ஆண்டொன்றிற்கு ரூ.4,000/– பெரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் இன மாணவியர்களில் 1187 மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படாமல் (NPCI Inactive) நிலுவையில் உள்ளது என பார்வையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்வி உதவித்தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள மாணவியர்களில் நீண்ட நாட்களாக பள்ளிக்கு வருகை புரியாமல் இருத்தல், இடைநிற்றல் அல்லது வேறு காரணங்களுக்காக வருகை புரியாமல் இருக்கும் மாணவியர்களின் விவரங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்திலும் மற்றும் அதன் நகல் ஒன்றினை இவ்வலுவலகத்திலும் சமர்ப்பிக்க மாவட்டக் கல்வி அலுவலருக்கு(இடைநிலைக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : நிலுவையில் உள்ள மாணவியர்களின் பட்டியல்.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர்

(இடைநிலைக் கல்வி)

மாவட்டக் கல்வி அலுவலகம்

வேலூர்.

நகல்

அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்

(தொடர் நடவடிக்கையின் பொருட்டு).